**மனவளர்ச்சி குன்றியவர்களுக்கான விடுதியுடன் கூடிய அரசு சிறப்பு பள்ளி மற்றும் தொழிற்பயிற்சி மையம், தாம்பரம் சானிடோரியம் மாணவர்கள் சேர்க்கை நடைபெறுதல் காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியர் அறிவிப்பு**

மனவளர்ச்சி குன்றியவர்களுக்கான விடுதியுடன் கூடிய அரசு சிறப்பு பள்ளி மற்றும் தொழிற்பயிற்சி மையம், ஜட்ஜ் காலனி, சேவை இல்லம் பின்புறம், தாம்பரம் சானிடோரியத்தில் செயல்படுகிறது. இந்நிறுவனத்தில் 6 வயது முதல் 14 வயது வரை உடைய மனவளர்ச்சி குன்றிய மாற்றுத் திறனாளி மாணவ மாணவியர் விடுதியுடன் சேர்க்கப்படுகிறார்கள். 22 வயதுவரை உடைய ஏனைய மாணவ மாணவியர் பகல்நேர மாணவர்களாக சேர்க்கப்படுகிறார்கள். இந்நிறுவனத்தில் சேரும் மாணவர்களுக்கு அவர்களின் அறிவு திறனுக்கு ஏற்ப, சிறப்பு கல்வி, சுயசார்பாக செயல்படுவதற்கான பயிற்சிகள், இயன்முறை பயிற்சி, பேச்சுப் பயிற்சி, ஆகியனவும் கற்பிக்கப்படுகிறது. இம்மாணவ மாணவியருக்கு சீருடை, கல்வி உபகரணங்கள், பகல்நேர மாணவர்களுக்கு மதிய உணவு, அரசால் வழங்கப்படும் இலவச கல்வி உபகரணங்கள் ஆகியவை வழங்கப்படுகிறது. எனவே, விருப்பமுடைய மாணவ மாணவியரின் பெற்றோர்கள், மாற்றுத் திறனாளிகளுக்கான தேசிய அடையாள அட்டை மற்றும் மாற்றுத் திறனாளி மருத்துவ சான்று, ஆதார் அட்டை, வயது சான்று, சிறப்பு கல்வி பயின்றவராக இருந்தால் பயிற்சி சான்று, 3 பாஸ்போட் சைஸ் புகைப்படம், ஆகியவற்றுடன் திட்ட அலுவலர், மனவளர்ச்சி குன்றியவர்களுக்கான அரசு நிறுவனம், அரசு மனவளர்ச்சி குன்றியவர்களுக்கான இல்லம், ஜட்ஜ் காலனி, சேவை இல்லம் பின்புறம், தாம்பரம் சானிடோரியம், சென்னை (தொலைபேசி எண் 7550265279) அவர்களுக்கு 12.06.2018 அன்று காலை 10.00 மணிக்கு நேரில் வந்து சேர்க்குமாறும் மேலும் கூடுதல் விவரங்களுக்கு மாவட்ட மாற்றுத் திறனாளிகள் நல அலுவலர், செங்கல்பட்டு (தொலைபேசி எண்:04427431853) அவர்களை தொடர்பு கொள்ளுமாறு காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.பா. பொன்னையா, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துக் கொள்கிறார்.

மாவட்ட ஆட்டசியர்
காஞ்சிபுரம்